# கொங்கு இரண்டாம் தலைமுறை



**திரு. K.V. கார்த்திக்** B.E., M.S., **அவர்கள்**
Managing Partner,
Deccan Industries, Coimbatore.

கொங்கு நாட்டின் தென் கிழக்கு கோடியில் கரூர்–திண்டுக்கல் மாவட்ட எல்லையில் அமைந்துள்ள ரங்கமலை அடிவாரத்தில் கோட்டூர் எனும் கிராமத்தில் கருப்பண்ண கவுண்டர் குப்பாயம்மாள் தம்பதியரின் ஒரே மகனாகப் பிறந்தார் Er.K.K.வேலுச்சாமி.

13வது வயதில் தனது தோட்டத்தில் பாசனத்திற்காக ஏற்றம் இறைக்கும் பணி செய்யும் பொழுது, இதற்கு மாற்றாக நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் அவர் மனதில் தோன்றியது. அதன் தொடர்ச்சியாக நீர்முழ்கிபம்புசெட்டுகள் என்று யாரும் நினைத்துக்கூட பார்க்காத காலத்தில், பொறியியல் பட்டப்படிபின் இறுதி ஆண்டு செயல்முறையில் “SUBMERSIBLE MOTOR”–ஐ வடிவமைத்து, தயார் செய்து காண்பித்தார். 1981இல் டெக்கான் இண்டஸ்ட்ரீஸ் எனும் பம்புசெட்டுகள் தயாரிக்கும் நிறுவனத்தை நிறுவினார். கிராமதில் பிறந்து வளர்ந்ததால் விவசாயிகளின் தேவைகளை நன்கு உணர்ந்து, பல புதிய வகையான பம்புசெட்டுகளை அறிமுகப்படுத்தினார். அந்த பம்புசெட்டுகள் புகழ்பெற்று ‘டெக்கான்’ வகை பம்புசெட்டுகள் என சந்தையில் அறியப்பட்டது. நுந்நீர் பாசனத்திற்காக “VERTICAL OPENWELL” பம்புசெட்டுகளை வடிவமைத்து வழங்கினார். OPENWELL பம்புசெட்டுகள் என்றாலே, Er.வேலுச்சாமி அவர்களின் பெயரை மட்டுமே குறிப்பிடும் அளவுக்கு புகழ் பெற்றார். பாசனத்திற்கான சிறப்பு தேவைகளை புரிந்து அதற்கான தனி பம்புசெட்டுகளை வடிவமைத்தும் வழங்கிவந்தார். புதிய கண்டுபிடிப்புகளுக்காக 1988 ஆம் ஆண்டு இந்திய ஜனாதிபதி விருது பெற்றார். வேலுச்சாமி – ரத்தினம் தம்பதியரின் ஒரே மகனாக K.V.கார்த்திக், இவருக்கு பின் டெக்கான் இண்டஸ்ட்ரீஸ் தலைமை பொறுப்பேற்றார். பொறியியலில் முதுகலை பட்டம் பெற்ற கார்த்திக், அவரின் தந்தையிடம் பம்ப்ஸ் தொழிலை பற்றிய பயிற்சியை பெற்றவர். தந்தையின் நினைவாக கார்வேல் எனும் பெயரில் புதிய தயாரிப்புகளை அறிமுகம் செய்தார். அனைத்து வகையான வாடிக்கையாளரின் தேவைகளை நிறைவேற்றும் விதமாக நாடெங்கும் விற்பனை கிளைகளை ஆரம்பித்து தொழிலை விரிவுபடுத்தியுள்ளார்.

நீரேற்றுத் திட்டங்கள் மற்றும் கூட்டுக் குடிநீர் திட்டங்களுக்கு பம்ப்செட்டுகள் வழங்குவதுடன் Electro Mechanical Contracting இலும் டெக்கான் இண்டஸ்ட்ரீஸ் தடம்பதித்தது. அதில் கிடைத்த அனுபவத்தில் இப்பொழுது ECC Contracting இலும்

டெக்கான் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம் தனது தொழிலை விரிவுபடுத்தி உள்ளது. பம்புகளுக்கென ஒரு Centre of Excellence உருவாக்க அரும்பாடுபட்டார், அதன் விளைவாக 2016 ஆம் ஆண்டு சிட்டார்க் (Si'TARC) ஆராய்ச்சி மற்றும் ஆய்வுக்கூடத்தில் நாட்டின் பம்புகளுக்கான ஒரே CoE–ஐ மத்திய அரசு அமைத்தது. இந்த மையத்தின் நிறுவனத் தலைவராக கார்த்திக் செயல்பட்டு வருகிறார்.

ISI தரச் சான்று வழங்கும் Bureau of Indian standards மற்றும் ஸ்டார் முத்திரை வழங்கும் Bureau of energy efficiency அமைப்புகளில் தொழில்நுட்பக் குழு உறுப்பினராக கடந்த 10 ஆண்டுகளாக உள்ளார். தென்னிந்திய பொறியியல் உற்பத்தியாளர்கள் சங்கம் – SIEMA வின் தலைவராக 2020 – 2022 ஆம் ஆண்டுகளில் பதவி வகித்தார். 2022 முதல் COINDIA – வின் தலைவராக பதவி வகித்துவருகிறார். இந்திய பம்ப்ஸ் உற்பத்தியாளர்களின் சங்கம IPMA வின் Sr.Vice President ஆக தற்போது உள்ளார்.

இவர் தொழில்துறை சார்ந்த பல்வேறு அமைப்புகளில் மிக முக்கிய பொறுப்புகளை வகித்து கொங்கு இனத்திற்கு பெருமை சேர்த்து வருகிறார். தனது தந்தை படித்த கிராமத்து பள்ளி தலைவராக இருந்து அப்பள்ளிக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து வருகிறார். விவசாயிகளின் முழு தேவைகளையும் சிறந்த முறையில் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதை குறிக்கோளாக கொண்டு செயல்பட்டு வருகிறார்.

தனது துக்காட்சி மணியன் குல செல்லாண்டியம்மன்– செக்கடி பெரியசாமி கோவில் மற்றும் கிராமத்து கோயில்கள் திருப்பணிக்களுக்கு தாராளமாக நன்கொடை வழங்கி வருகிறார். கார்த்திக் அவர்களின் மனைவி முத்து அபிராமி லிங்கேஸ்வரி, MBA பட்டதாரியான இவர் தங்கள் Info Institute of Engineering கல்லூரியை நிர்வாகித்து வருகிறார். மு.மு வேலுகண்ணா என்ற மகனும் மு.மு.வேதவேல்விழி என்ற மகளும் உள்ளனர். விவசாய மண்ணின் பெருமை, பாரம்பரியம் ஆகியவைகளை அடுத்து வரும் தலைமுறை உணர வேண்டும் என்பதற்காக மகன் மற்றும் மகள் இருவரையும் விவசாயத்தில் பங்கு பெற வைத்துள்ளார். கிராமிய வாழ்வியல் முறையை கைவிடக்கூடாது என்பதையும், கொங்கு மக்கள் அனைவரும் தங்களது கிராமத்திற்கு சென்று வர வேண்டும் என்பதையும் வலியுறுத்தி வருகிறார்.

# கொங்கு இரண்டாம் தலைமுறை தொழில்துறை சாதனையாளர்



**திரு. S. ராஜா கதிரவன்** B.E., **அவர்கள்**
Managing Director,
The Zigma Technlogies India Pvt Ltd., Chennai.

சொந்த மாவட்டம் : ஈரோடு

***கல்வி :*** மதுரை தியாகராஜர் பொறியில் கல்லூரியில் 1989ம் ஆண்டு B.E. பட்டம்.

- ZIGMA நிறுவனம் 30 ஆண்டுகளாக 3,800 பணியாளர்களுடன் செயல்பட்டு வருகின்றது.
- ISO 9001:2015, ISO 14001:2015, ISO 27001:2013, ISO 20000:2011 தரச்சான்றிதழ் களைப் பெற்றுள்ளது.

  ZIGMA நிறுவனம், தமிழகத்தின் பத்திரப்பதிவுத்துறையில் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக கணிணி மயமாக்கலில் முக்கியப் பங்கேற்றுள்ளது.
- தமிழக வணிகவரித் துறையின் கணிணி மயமாக்கலில் முக்கியப்பங்கேற்றுள்ளது. இத்துறையின் 3,000 க்கும் மேற்பட்ட அலுவலர்கள் மற்றும் 1 இலட்சம் வணிகர்களுக்கு GST மென்பொருளில் பயிற்சி வழங்கப் பட்டுள்ளது.
- தமிழ்நாடு தேர்தல் ஆணையத்தின் அனைத்து செயல்பாடுகளையும் கணிணி மயமாக்கல் மற்றும் இணையவழியில் நேரடி கண்காணித்தல் பணிகளை வெற்றிகரமாக செயல்படுத்தி வருகின்றது.
- 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அரிய தமிழ் நூல்களை மின்னுருவாக்கம் செய்து தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் மின் நூலகத்திற்கு வழங்கியது. இந்த மின் நூலகம் தெற்காசியாவிலேயே மிகப்பெரிய மின் நூலகமாக உள்ளது. கூடுதலாக 16 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஓலைச்சுவடிக் கட்டுகள் மின்னுருவாக்கம் செய்யப்பட்டு இந்த இணையதளத்திற்கு வழங்கியுள்ளது.
- மின்னுருவாக்கப்பட்ட நூல்கள், ஆவணங்கள் மற்றும் ஓலைச்சுவடிகளை தற்கால தலைமுறை மட்டுமல்லாது வருங்கால சந்ததியினரும் பயன்படுத்தும் வகையில் பாதுகாக்கும் பொருட்டு digital image to microfiche தொழில்நுட்பத்தில் பாதுகாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 500 ஆண்டுகளுக்கு பின்பும் ஆவணங்களை microfiche to digital image முறைக்கு மாற்ற இயலும்.
- ZIGMA Green Energy வாயிலாக சூரிய ஒளி மற்றும் காற்றாலைகள் மூலமாக புதுப்பிக்கத்தக்க மின்சாரம் ஆண்டுக்கு 2 கோடி யூனிட் சுற்றுச்சூழலுக்கு ஏற்ப உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது.

# கொங்கு இரண்டாம் தலைமுறை
# தொழில்துறை சாதனையாளர்



திரு. **B. பிரபு** B.E., **அவர்கள்**
Executive Director,
Precision Equipments Chennai Pvt Ltd., Chennai.

தொழில் துறையில் இளம் சாதனையாளராக வளம் வரும் திரு.பிரபு பாலசுப்பிரமணியன் 1978 ம் ஆண்டு கொங்கு மண்டலம் பல்லடத்தில் திரு.க.பாலசுப்பிரமணியன் திருமதி.பத்மாவதி அவர்களின் மூத்த புதல்வனாக பிறந்தார். செல்வி. ஜெயலட்சுமியை துணைவியராக 2005 ம் ஆண்டு கரம் பிடித்தார். இவர்களின் இனிய இல்வாழ்க்கைக்கு மகிழ்வூட்ட அனன்யா எனற ஒரே மகள். பிரபு தன் பள்ளிப்படிப்பை கோபாலபுரத்தில் உள்ள டி.ஏ.வி. பள்ளியில் முடித்தார். தன் பி.ஈ. துறையில் மெக்கானிக்கல் பொறியியல் கல்வியினை சென்னை பல்கலைக்கழகத்தில் முடித்தார். தன் மேல் படிப்பினை அதே மெக்கானிக்கல் பொறியியல் பிரிவில் அமெரிக்காவில் உள்ள ரோச்செஸ்டர் பல்கலைக்கழகத்தில் எம்.எஸ். முடித்துவிட்டு சில வருடம் நியூயார்க்கில் பணி செய்தார். தான் பெற்ற தொழில் நுட்ப அறிவு தாய் நாட்டிற்கே பயன்பட வேண்டும் என்ற சிந்தனையில் சென்னை திரும்பி தன் குடும்ப தொழில் நிறுவனமான பிரிசீசிஸ்யன் எக்யூப்மெண்ட் நிறுவனத்தில் பொறுப்பேற்றுக்கொண்டார்.

தற்போது பிரிசீசியன் எக்யூப்மெண்ட தொழிலகத்தின் செயல் இயக்குனராக (எக்சியூட்டிவ் டைரக்டர்) தலைமையேற்று செயல்பட்டுவருகிறார். இவர் தலைமையேற்றுள்ள கனரக தொழில் நிறுவனத்தை இவரின் சித்தப்பாவும், இவருடைய வாழ் நாள ஆலோசகருமான திரு.ப.க.ஈசுவர மூர்த்தியுடன் இணைந்து திறம்பட நடத்தி வருகிறார். சமீபத்தில் தென்னிந்தியாவிலேயே மிக அதிகமான எடை கொண்ட அதாவது 250 மெட்ரிக் டன் கொண்ட ஒரு சிங்கிள் மிசினரியை ஏற்றுமதி செய்து சாதனைபடைத்துள்ளார். சி.என்.ஜி. எனப்படும் திரவ எரிபொருளை ஆவியாக மாற்றக்கூடிய வேபரைஷர் என்ற சாதனத்தை இந்தியாவில் முதன் முறையாக அமெரிக்காவில் உள்ள சிபி என்ற நிறுவனத்தின் கூட்டு முயற்சியுடன் தயாரித்த பெருமை இவரது நிறுவனத்திற்கே உரியது. மேலும் ஒன்றிய அரசின் மேக் இன் இந்தியா திட்டத்தின் மூலம் பல சிக்கலான மெசினரிகளின் பாகங்களை வெளி நாட்டில் இருந்து இறக்குமதி செய்வதற்குப்பதிலாக உள் நாட்டிலேயே சொந்தமாக தயாரித்து தொழில் துறைக்குப்பயன்படுத்தியதன் மூலம் பிரபு இந்திய ஒன்றியரசின் அன்னியச்செலாவனியில் ரூபாய் இருபது கோடியளவில் மீதப்படுத்தி அதனைச்சேமித்து, இந்திய அரசுக்கு உதவியுள்ளார். இந்தியளவில் உள்ள ஐ.ஏ.சி.சி. என்ற தொழில் முனைவோர் சம்மேளத்திற்கு முதல் முறையாக ஒரு இளம் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு செயல்பட்டு

வருகிறார். தமிழ் நாடு அரசின் சார்பாக சிறந்த தொழில் அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டு மாண்புமிகு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விருது வழங்கி கௌரவித்துள்ளார்.

இருங்காட்டுக்கோட்டை உற்பத்தியாளர்களின் சங்கமான சிப்காட்டின் தலைவராக பொறுப்பேற்று செயல்பட்டார். இவரின் முயற்சியால் உள்கட்டமைப்புத்துறை தொழில் பூங்கா அமைய முக்கியகாரணமாவார். மேலும் சிமா என்கிற ஸ்கில் வளர்ச்சி மையத்தை ஏற்படுத்தி கிராமப்புறத்தில் உள்ள வேலை வாய்ப்பற்ற 200 இளைஞர்களுக்கு பல்வேறு தொழில் பயிற்சியினை குறிப்பாக வெல்டிங் மற்றும் சி.என்.சி. மெசினிங்துறையில் பயிற்சி கொடுத்து அவர்களுக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுத்துள்ளார்.

இந்தோ அமரிக்கன் சேம்பர் ஆப் காமர்ஸ், தமிழ் நாடு பிரிவின் சேர்மனாக இருந்த போது, தமிழ் நாடு அரசின் ஒத்துழைப்புடன் 500 க்கும் மேற்பட்ட பல்வேறு தொழில்சார்ந்த தொழில் முனைவோர்களுக்கு ஊக்கமூட்டும் வகையில் வழி முறைகளைக்கூறி நடத்தியுள்ளார். இவர் சிறு குறு நடுத்தரத்தில் உள்ள தொழிற்சாலைகளில் ஏற்றுமதியை எப்படி அதிகரிக்கலாம் என்று சிந்தித்து ஒரு சாத்தியமான செயல் பாட்டினை உருவாக்கியுள்ளார். இதன் மூலம் இன்று ஒரு டஜனுக்கும் மேற்பட்ட தொழில் முனைவோர்களுக்கு ஏற்றுமதி உற்பத்தியில் உதவி வருகிறார்.

இவர் தன் சமூகக்கடமையாக ஏழை எளிய மக்களின் முன்னேற்றத்திற்காக உலக முழுவதும் செயல்பட்டு வரும் லைன்ஸ் கிளப் நந்தம்பாக்கம் கிளையின் தலைவராகவும் இருந்துவருகிறார். இதன் மூலம் இவர் மாணவர்களின் எதிர்கால வளர்ச்சிக்கு வழிகாட்டும் நிகழ்ச்சிகளையும், சமீபத்தில் திருப்பூரில் இருந்து 50 க்கும் மேற்பட்ட அரசுப்பள்ளி மாணவர்கள் முதல் முறையாக விமானத்திலும், ரயிலிலும் சென்னை வந்தபோது அவர்களின் இரண்டு நாள் அறிவியல் சுற்றுழாவுக்கான கல்பாக்கம் அணுமின் நிலையம், வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம், மகாபலிபுரம், வண்டலூர் உயிரியல் பூங்கா, பிர்லா கோளரங்கம் என அறிவியல் சார்ந்த இடங்களை கண்டுகளிக்க இரண்டு நாள வாகனமும் ஏற்பாடும் செய்து அரசுப்பள்ளி மாணவர்களின் அறிவியல் கல்வி வளர்ச்சிக்கும் உதவியுள்ளார். மேலும் இந்தப்பூமியினை பசுமைப்போர்வையாக்கி பூமி வெப்பமயமாவதைத்தடுக்கும் விதமாக மரம் நடும் நிகழ்வினை தொடர்ச்சியாகவும் நடத்திவருகிறார்.

இவரின் தாத்தாவான பி.பி.கே.கந்தசாமிக்கவுண்டர் மற்றும் பாட்டி கந்தம்மாள் நினைவு அறக்கட்டளையினை தன் குடும்ப உறவுகள் மூலம் ஏற்படுத்தி அதன் மேனேஜிங் ட்ரஸ்ட்டியாக செயல்பட்டு பல்வேறு விதமான சமூகத்தின் எளிய நிலையில் மாணவ மாணவிகளுக்கு கல்வி சார்ந்த உதவிகளுக்கும் , சமூக செயல்பாடுகளுக்கும் இந்த அறக்கட்டளை மூலம் உதவி வருகிறார்.

# கொங்கு இரண்டாம் தலைமுறை தொழில்துறை சாதனையாளர்



திரு. **S. மனோஜ் பூசப்பன்** B.E., M.Sc., அவர்கள்
Managing Director,
Renaatus Projects Private Limited, RPP Group, Chennai.

திரு மனோஜ் பூசப்பன் ஈரோட்டின் பெருமைமிக்க RPP குழுமத்தின் தலைவர் திரு. செல்வசுந்தரம், திருமதி பத்மினி சுந்தரம் அவர்களுக்கு தலைமகனாய் பிறந்தார். RPP குழுமம் கட்டிடத்துறையில் பல ஆண்டுகள் புரட்சிகளை புரிந்து தமிழகத்தின் வளர்ச்சியில் பங்கு வகிக்கின்றது. இச்சிறப்பு மிக்க RPP குழுமத்தில் நான்காம் தலைமுறை தொழில் அதிபராக திரு மனோஜ் பூசப்பன் அவர்கள் உருவெடுத்துள்ளார். தனது பள்ளிப் படிப்பை ஏற்காடு மாண்ட்ஃபோர்ட்டிலும். பின்பு சென்னை கிண்டி பொறியியல் கல்லூரியில் சிவில் என்ஜினிரிங் கற்று தேர்ந்த பின் லண்டன் மாநகரில் பாரதத் தந்தை மகாத்மா காந்தி அவர்கள் பயின்ற பிரசித்த பெற்ற UNIVERSITY COLLEGE OF LONDON பல்கலைக்கழகத்தில் மேற்படிப்பை பூர்த்தி செய்தார்

தனது கல்வியை பூர்த்தி செய்த பின்பு , வடஇந்தியாவின் புகழ்மிக்க லன்கோ.நிறுவனத்தில் தொழிற்பயிற்சியை தொடங்கினார். பின்பு RPP நிறுவனத்தின் அங்கமான RENAATUS PROJECTS PRIVATE LIMITED எனும் பெருமை மிக்க நிறுவனத்தின் JMD ஆக பொறுப்பேற்று, தனது சாதுர்த்தால் பல புரட்சிகரமான கட்டிடத்திட்டங்களை வெற்றிகரமாக செய்து முடித்தார். அவரது தலைமையில் மோரீஷஸ் நாட்டின் உச்சநீதிமன்றம், மாலத்தீவில் பல அடுக்குமாடி குடியிருப்புகள், இந்திராகாந்தி நினைவு மருத்துவ மனை சீரமைப்பு, மற்றும் ஏனைய திட்டங்களை வெற்றிகரமாக காலக்கெடுவுக்கு முன்னதாக பூர்த்திசெய்தார் . இதனை பாராட்டவும், இப்பெருமையினை பறை சாற்றும் விதமாக இந்திய பிரதமர் மற்றும் மொரிஷியஸ் குடியரசுத்தலைவரிடம் பாராட்டும் நற்சான்றிதழ்கள் பெற்றார். தனது சீறிய முயற்சியால் தமிழ்நாட்டின் பல மேம்பாலங்கள், திருப்பூர் மருத்துவமனை மற்றும் குடிருப்புகளையும் கட்டி வெற்றி கொண்டார்

தற்போது மிகப்பெரிய விமானநிலைய கட்டமைப்பு திட்டத்தை மாலத்தீவில் செயல்படுத்திக் கொண்டுள்ளார்.

இச்சிறப்பு பெற்ற இளம் தொழில் அதிபர் மனோஜ் பூசப்பன் செல்வசுந்தரம் அவர்களுக்கு பாராட்டுகளை சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் தெரிவித்து கொண்டு மென்மேலும் பல பெருமைகளை இக்கொங்கு மண்டலத்திற்கு அவர் தேடி தர எல்லாம் வல்ல இறைவனை வணங்கி இவ்விருதினை வழங்குகின்றோம்.

# வெளிநாடு வாழ்கொங்கு சாதனையாளர்



திரு. **P.K. சுந்தர்** அவர்கள்
Founder, Nisham Electrical & ConstructionSdn Bhd
My Hotel, Metro Groups, Malaysia.

இயக்குனர் Metro Group
இயக்குனர், மை ஹோட்டல் குரூப் ஆஃப் கம்பெனிகள்
இயக்குனர், யுனைடெட் டெபால் ரூம்செஸ் எஸ்டிஎன் பிஎச்டி
இயக்குனர், டிரேட்ஸ்டார் பிஎெஸ்ட்ரிகல் எண்டர்பிரிஸ்

## பின்னணி:

ஏழ்மையான குடும்பப் பின்னணியில் இருந்து வந்தாலும், படிப்பை மேற்கொள்வதற்குத் தேவையான பொருளாதார ஸ்திரத்தன்மை இல்லாவிட்டாலும், திரு. சுந்தர் ஒரு போதும் திரும்பிப் பார்த்ததில்லை, தான் அனுபவித்த கஷ்டத்தை நினைத்து வருந்தியதில்லை. திரு.சுந்தரின் மின்சாரம் மற்றும் கட்டுமானத் துறையில் பல வருட அனுபவமும், ஒவ்வொரு திட்டத்திலும் அவருடைய அணுகுமுறையும் நிஷாமின் வெற்றிக்குப் பின்னால் பெரும் பங்காற்றுகிறது. நிஷாமில் இருந்து, திரு. சுந்தர் ஒரு எலக்ட்ரீஷியனாக இருந்து இப்போது மின் துறையில் நிபுணராக முன்னேறி, சப்ளையர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் மிக முக்கியமாக திருப்திகரமான நெட்வொர்க்கைப் பெற்றுள்ளார்.

மெக்டொனால்ட்ஸ் மலேசியா என்ற தனது முக்கிய வாடிக்கையாளருடன் நாடு முழுவதும் வாடிக்கையாளர்களைத் திரும்பப் பெறுகிறார். எலக்ட்ரிக்கல் தவிர, திரு சுந்தர் விருந்தோம்பல், அடகுக் கடைகள் மற்றும் விவசாயம் போன்ற பல தொழில்களிலும் ஈடுபட்டுள்ளார். நிறுவல் சோதனை. மின்மாற்றி மோட்டார்கள் சுவிட்ச் கியர் மற்றும் பல்வேறு தொழில்துறை மற்றும் உள்நாட்டு மின் உபகரணங்களை ஆணையிடுதல் மற்றும் பராமரித்தல்.

விறைப்பு சோதனை மற்றும் மின் இணைப்புகள் மற்றும் துணை மின்நிலைய ஜெனரேட்டர்களை இயக்குதல்.

- ❖ நிறுவுதல், பராமரித்தல், சோதனை செய்தல் மற்றும் பேட்ச் ஆலைகளை இயக்குதல்.
- ❖ வடிவமைப்பு, விநியோக விநியோக நிறுவல், சோதனை மற்றும் ஆணையிடுதல், L.V.மின் சேவைகள் AMF அமைப்பு மற்றும் PABX தொலைபேசி அமைப்பு உட்பட.
- ❖ வடிவமைப்பு, வழங்கல், விநியோக நிறுவல் சோதனை மற்றும் ஏர் கண்டிஷனிங் மற்றும் தீயை இயக்குதல் சண்டை சேவை.

- தெருவிளக்கு அமைத்தல்.
- எல்.வி. கேபிள்கள் மற்றும் எச்டி கேபிள்களை இடுதல்.
- அலங்கார விளக்குகள்,
- பொதுவான வீட்டு மற்றும் தொழில்துறை மின் வேலைகளில் பிழை கண்டறிதல் மற்றும் பழுதுபார்த்தல்.

  மிக உயர்ந்த அளவிலான சேவையை வழங்குவதன் மூலம் மொத்த வாடிக்கையாளர் திருப்தியை உறுதிசெய்யும் பணி அறிக்கை

- ஊழியர்களிடையே சொந்தம் என்ற உணர்வை உருவாக்குவதன் மூலம் குழுப்பணியின் தேவையை வலுப்படுத்துதல் அவர்கள் நிறுவனத்துடன் வளர முயற்சி செய்யலாம்
- நிறுவனம், வாடிக்கையாளர்கள் மற்றும் சப்ளையர்கள் இடையே ஆரோக்கியமான வணிக உறவை மேம்படுத்த அதிகபட்ச திருப்திகரமான சேவைகளை வழங்குவதன் மூலம் வாடிக்கையாளர்களின் முதலீட்டை நியாயப்படுத்துதல்



திரு. **காசி கவுண்டன்** அவர்கள்
Former Project Director, General Motors, Detroit, USA.

வைகுந்தம் என்ற ஒரு கிராமப்புற விவசாயக் குடும்பத்தில் 5ஆவது குழந்தையாக, கடைசியாகப் பிறந்ததால் ஒரு நிபந்தனையுடன் – ஒவ்வொரு வருடமும் வகுப்பில் தேர்ச்சி பெற்றால் படிக்க வைப்போம் என்றார்கள். உயர்நிலைப்பள்ளி (Govt. High School), S.S.L.C இல் வகுப்பில் 2ஆவது மாணவனாகத் தேர்வு பெற்றார். விவசாயத்தில் வரும் எல்லா வருமானமும் கொடுத்தால்தான் படிக்கவைக்க முடியும். அண்ணன்கள் இருவரும், "நீ நன்றாகப்படி நாங்கள் உனக்காகப் பாடுபடுவோம்" என்று இவரை உற்சாகப்படுத்தினர். திருச்சி, புனித சூசையப்பர் (St. Joseph) கல்லூரியில் P.U.C இடம் கிடைத்து வகுப்பில் முதன்மையாக வந்தார். அடுத்த கட்டம் பொறியியல் கல்லூரி. ஆசிரியர்கள் காட்டிய வழியில் – பொறியியல் படிப்பைப் படிக்கலாம் என முடிவெடுத்த இந்தக் கிராமப்புற மாணவனுக்குத் தன் கல்லூரியில் இடம் கொடுக்க வேண்டும் என அப்போது இவரின் முன்னேற்றத்திற்கு வித்திட்டவர் ஜி.ஆர். தாமோதரன், பூ.சா.கோ. பொறியியல் (PSG Tech) கல்லூரி முதல்வர். B.E. படிப்பில் மாகாணத்திலேயே முதல் மாணவனாகத் தேறி, மைசூர் மகாராஜா அவர்கள் கையால் (Chancellor of Madras University) சென்னைப் பல்கலைக்கழகத்தின் தங்கப்பதக்கம் பெற்றார். மேலும் நண்பர்கள் வழிகாட்டலால் பெங்களூர் இந்திய அறிவியல் (Indian Institute of Science) நிறுவனத்தில் இரண்டு வருடம் (ME) மேற்படிப்பு. ஒரு வருடம் பூ.சா.கோ பொறியியல் (PSG Tech) கல்லூரியில் ஆசிரியராகப் பணி புரிந்தார்.

1968இல் 5 டாலருடன் (அப்போது இந்திய நாட்டின் அன்னியச் செலாவணிச் சட்டம்) சின்சினாட்டி பல்கலைக்கழக்கத்துக்கு (University of Cincinnati) ஜூன் 1968இல் சென்றார்.

1968-70 M.Sc in Metallurgical Engineering at University of Cincinnati

1970-1986 Worked for a Swiss based Company in North America

1986-2016 Worked at General Motors Corporation building cars.

2016இல் ஓய்வு பெற்ற பின், திரு மாணிக்கம் மகாலிங்கம் அய்யா ஆரம்பித்த சக்தி குழுமம் நிறுவனத்திற்கு 2 ஆண்டுகள் ஆலோசகராக இருந்துவிட்டு, இப்பொழுது முழு ஓய்வு பெற்றுள்ளார்.

சில முயற்சிகள் மற்றும் சேவைகள்:


டெட்ராய்ட் நகரில் தமிழ்ச்சங்கம் தொடங்கப்பட்டது.

சென்னை, கொங்கு நண்பர்கள் சங்கத்திற்குத் தொடக்கத்தில் நிதி சேகரித்து அனுப்பப்பட்டது.

தமிழ்நாடு அறக்கட்டளையை (Tamil Nadu Foundation) உருவாக்கப்பட்டது. இந்த அறக்கட்டளை இப்போது தமிழ்நாட்டில் பல அறத்தொண்டுகளைச் செய்து வருகிறது. தமிழ்நாடு அறக்கட்டளை ஆசி பெற்று, கொங்கணாபுரம் திரு ஆயிக் கவுண்டன் அவர்கள் ஆகநல் பள்ளியைத் (AGN SCHOOL) தொடங்கி கிராமப்புற மாணவர்களை முன்னேற்றப் பாதையில் கொண்டுசெல்லும் முயற்சிக்கு உறுதுணையாக இருந்து வருகிறார்.

அமெரிக்காவில் 30 வருடங்களுக்கு முன்பு தொடங்கிய கொங்கு நற்பணி மன்றம் இப்போது, கொங்குக் குடும்ப விழாவாக நடந்து வருகிறது. இந்த ஆண்டு செப்டம்பர் முதல் வாரத்தில் அட்லாண்டா (Atlanta) நகரில் கொங்குக் குடும்ப விழா– 2023 நடைபெறவுள்ளது. நாற்பது வருடங்களுக்கு முன்பு மருத்துவர் நல்லா பழனிச்சாமி டெட்ராய்ட்டில் இருந்தபோது வித்திட்ட ஒரு மகத்தான சேவைத் திட்டம் ‘கோவை மருத்துவ மையம்’ (Kovai Medical Centre and Hospital Ltd), ஆரம்பித்துப் பல இடையூறுகளை வெற்றிகொண்டு இப்போது KMCH தென்னிந்தியாவிலேயே ஒரு தலைசிறந்த மருத்துவ மையாக இருக்கிறது. நல்லா பழனிச்சாமிக்கு உறுதுணையாக இருந்து அதன் வளர்ச்சியில் (இயக்குநராக) இவரின் பங்கு பெரும்பங்கு. கிராமப்புற மக்களுக்கு மருத்துவத்தை எளிதாக அணுகும் வாய்ப்பை ஏற்படுத்தியதில் இந்த மையத்தின் பங்கு முக்கியமானது.

# வெளிநாடு வாழ்கொங்கு சாதனையாளர்



திருமதி **கலாவதி திருநாவுக்கரசு**
M.Sc., (Advanced Practice),
M.Sc., (IPPE), Fellow (HEA), Teacher (NMC), NMP, RN (Adult) **அவர்கள்**
Advanced Clinical Practitioner, DHU Health Care, UK.
& **தமிழ் ஆர்வலர் குழு,** UK.

திருமதி. கலா திருநாவுக்கரசு அவர்கள் பன்முகம் கொண்ட திறமையாளர். இவர் நம் தமிழ் தாயகத்தில், தமிழ் கொஞ்சி விளையாடும் கொங்கு மண்டலத்தை பூர்வீகமாக கொண்டவர். கடந்த 17 ஆண்டுகளாக ஐக்கிய ராஜ்ஜியத்தில் வசித்து வருகிறார்.

இவர் செவிலியத்தில் முது நிலை பட்டம் பெற்றவர், நர்சிங் மற்றும் மிட்ஒய்பெரி கவுன்சிலில் மேம்பட்ட மருத்துவ பயிற்சியாளராகவும் திறன் மேம்பாட்டாளராகவும் இருந்து வருகிறார். மேலும் திருமதி. கலா அவர்கள் மிகுந்த தமிழ் பற்று கொண்டவர். இவர் தமிழ் ஆர்வலர் குழு நிர்வாக உறுப்பினராகவும், சிறந்த பட்டிமன்ற பேச்சாளராகவும், பிரிட்டிஷ் இந்திய செவிலியர்கள் கிழக்கு மிட்லாண்ட்ஸ் நிர்வாக வழிநடத்துனராகவும், பிரிட்டிஷ் இந்திய வானொலி ஜாக்கியாகவும் இருந்து வருகிறார்.

இவர் பட்டிமன்ற ஆசான் திரு. சாலமன் பாப்பையா , திரு.ராஜா , திரு . புலவர் இராமலிங்கம் மற்றும் திருமதி. பாரதி பாஸ்கர் ஆகியோரோடு இணைந்து பட்டிமன்றத்தில் பேசியுள்ளார். இவரது கணவர் திரு.அரசு குழந்தைசாமி UK கொங்குவின் தலைவராக 2 ஆண்டுகள் பதவி வகித்துள்ளார். அவருடன் இணைந்து சில தொண்டு சேவைகளில் பங்கேற்றுள்ளார்.

Covid 19 கால கட்டத்தில் முன் வரிசையில் இருந்து சேவை செய்துள்ளார். பிரிட்டீஸ் அரசாங்கத்தின் 'Bravery Award' பெற்றுள்ளது குருப்பிடதக்கது.

**சாதனைகள் :**

- ராணி எலிசபெத் சார்பாக 2015 இல் துணிச்சலான விருது டெர்பியில் ஏற்பாடு செய்யப்பட்ட பல சமூக நிகழ்வுகள்
- நிதியளிப்பு நிகழ்வுகள் – மூன் லைட் வாக்கிங் – டெர்பி மருத்துவமனை தொண்டு நடைபயிற்சி பல ஆண்டுகளாக அல்சைமர் சமுதாயத்திற்காக 5K நடைப்பயிற்சி – 1000 பவுண்டுகளுக்கு மேல் திரட்டப்பட்டது– திரட்டப்பட்டது அந்த நிகழ்வின் போது.
- "பெண்கள் சாதனையாளர் விருது – தமிழ் அமெரிக்கா டிவி 2021 100 புதுமைகளில் பெண்கள்
- 2021 ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் இந்தியன் தமிழ் வானொலியின் இறுதிப் போட்டியாளரால் IIW– க்கான சமூக நட்சத்திர விருது – அவர் சிறந்த கல்வி முன்மாதிரிக்கான விருதை ஊக்குவிக்கிறார்
- 2022 பாரதி தமிழ் சாரதி விருது –2022 டெல்லி கலை பேரவையிலிருந்து
- சமூக சாம்பியன் விருது 2023 இல் டெர்பி தமிழ் குடும்பம்
- கல்வியில் சாதனை மற்றும் பிறர் பிளாக் மைனராக இருப்பதற்கு முன்மாதிரி Ethnicity Group என்ற கட்டுரை வெளியிட்டுள்ளது. வெளி நாட்டில் வாழ்ந்தாலும் இவர் தமிழை
- வளர்ப்பதிலும், நம் கொங்கு பாரம்பரியத்தை எடுத்து செல்வதிலும் இவருடைய பங்கு அளப்பரியது.

## கொங்கு தொழில் சாதனையாளர்



திரு. **C. கதிரவன்** M.B.A., அவர்கள்
Managing Director, Q-Check Pharmaceuticals Pvt Ltd., Chennai.
Director, Betlife Formulations Pvt Ltd., Chennai.

கியூ செக் பாமர்மசிட்டிகல்ஸ் பிரைவேட் லிமிடெட் 2004 ஆம் ஆண்டு சென்னையை தலைமையிடமாக கொண்டு திரு கதிரவன் மற்றும் திரு பிரதீப் குமார் ஆகியோர்களால் துவக்கப்பட்டது. இந்நிறுவனம் தனித்துவமான மருந்து உற்பத்தி மற்றும் விற்பனையை மேற்கொண்டு வருகிறது. சிறந்த தரமான மருந்துகளை அனைத்து மக்களிடமும் கொண்டு சேர்க்க வேண்டும் என்ற நோக்குடன் இந்நிறுவனம் இருதயம், சர்க்கரை நோய், நரம்பியல், எழும்பியல், குழந்தைகள் நலம், மகளிர் நலம் போன்ற பல்வேறு துறைகளுக்கு மருந்துகள் உற்பத்தி மற்றும் விற்பனை செய்து வருகிறது.

கியூ செக் நிறுவனம் 180 தொழிலாளர்களுடன் தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, தெலுங்கானா மற்றும் ஒடிசா ஆகிய மாநிலங்களில் மருந்துகளை விற்பனை செய்து வருகிறது. தனித்துவம் மற்றும் தரமான மருந்துகளின் மூலம் சுமார் 15,000 மேற்பட்ட மருத்துவர்களின் நம்பிக்கையைப்

கியூ செக் நிறுவனம் பெற்றுள்ளது. அவர்கள் கியூ செக் நிறுவனத்தின் மருந்துகளை தேவைப்படுபவர்களுக்கு பயன்படுத்தி வருகிறார்கள்.

மேலும் கியூ செக் நிறுவனம் மலேசியாவைச் சார்ந்த சூர்யா உத்தாரா என்ற நிறுவனத்துடன் இணைந்து மலேசியாவிற்கு ஏற்றுமதியும் செய்து வருகிறது. இந்தியாவில் கியூ செக் நிறுவனத்தின் மூலம் உற்பத்தி செய்யும் மருந்துகள் சூர்யா உத்தாரா என்ற நிறுவனத்தின் மூலம் மலேசியா முழுவதும் விற்பனை செய்யப்படுகிறது

# கொங்கு தொழில் சாதனையாளர்



திரு. **G. விஜயகுமார்** அவர்கள்
தலைவர், கொங்கு குடும்பம், கோவை
GV Associates, GV Homestays

**ஆயிரக்கணக்கான கொங்கு குடும்பங்களை ஒன்றிணைத்து நமது கலாச்சாரம், பண்பாடு, வாழ்வியல் முறைகளை வளரும் தலைமுறையும் பின்பற்றுவதற்கான வாய்ப்புகளை உருவாக்கி நமது சமுதாயத்திற்குப் பெருமை சேர்த்துக் கொண்டிருக்கும் கோவையை சேர்ந்த கொங்கு குடும்பத்தின் தலைவர், ஜி.வி. அசோசியேட்ஸ், ஜி.வி. ஹோம்ஸ்டேஸ் நிறுவனத்தை வெற்றிகரமாக நடத்திக் கொண்டிருக்கும் திரு. விஜயகுமார் அவர்கள் வெற்றிகரமாக தொழில் நடத்தி வருகிறார்.**



**திரு. G. விஷ்ணுவர்தன் அவர்கள்**
Sound Engineer
**வசன ஒலிப்பதிவு பொறியாளர், சினிமாத்துறை**

ஈரோடு மாவட்டம் கோம்புப்பாளையத்தை பூர்வீகமாக கொண்ட ஓய்வு பெற்ற வங்கி மேலாளர் திரு கோபாலகிருஷ்ணன் மற்றும் திருமதி பானுமதி அவர்களது தலைமகனாகப் பிறந்தவர். வர்ஷினி என்ற ஒரு தங்கையும் உண்டு. சத்தியமங்கலத்தில் பொறியாளர் திரு ஜெகநாதன் – ராமேஸ்வரி அவர்களது புதல்வி ரக்ஷனா அவர்களை னைவியாக அடைந்துள்ளார். ஷன்விகா எனும் இளந்தளிர் இவர்களது இல்லத்தை அலங்கரிக்கின்றது. இளம் வயது முதல் கணினி, ஊடகம், புகைப்படம் மற்றும் அனிமேஷன்னில் மிகுந்த ஈடுபாடு கொண்டவராக விளங்கினார். எனவே B.C.A. ஈரோடு கொங்கு கலை அறிவியல் கல்லூரியில் பயின்று கலை மீது கொண்ட காதலால் M.Sc. ( Electronic Media) கோவை P.S.G கலை அறிவியல் கல்லூரியில் சேர்ந்தார். கோவையில் கல்லூரியில் பயின்று கொண்டு இருக்கும்போது ஒரு முறை, Sound Engineering என்று ஒரு தொழில் முறை இருப்பதை கண்டு அறிந்து அதில் முழு ஆர்வம் காட்ட தொடங்கினார், குறும்படங்கள் மற்றும் கல்லூரி கலை நிகழ்ச்சிகள், விழாக்களில் ஆடியோ தொழில் நுட்பங்களை பயின்று அதை கையாள தொடங்கினார். இவரது ஆர்வத்தைக் கண்ட இவரது கல்லூரிப் பேராசிரியர்கள் சென்னையில் உள்ள ஒரு புகழ்பெற்ற ஒலிப்பதிவு நிறுவனத்திற்கு பரிந்துரை செய்தனர்.

சில ஆண்டுகளாக உதவி பணியாளராக சூரரைப் போற்று, விவேகம், ராட்சசி, பிகில், அசுரன், கர்ணன், சர்பட்டா பரம்பரை, மாஸ்டர், சுல்தான், அண்ணாத்தே போன்ற பல முன்னணி நட்சத்திர கலைஞர்கள் மற்றும் இயக்குநர்கள் திரைப்படங்களில் பயிற்சி மேற்கொண்டுள்ளார்.

தற்பொழுது மயிலை Dr. ராதாகிருஷ்ணன் சாலையில் அமைந்துள்ள Knack Studios நிறுவனத்தில் Sound Engineer பணி மேற்கொண்டு உள்ளார். இது வரை முன்னணி வசன ஒலிப்பதிவு செய்து வெளி வந்த சில திரைப்படங்கள்: யானை, அரண்மனை 3, வாரிசு, Love Today, நித்தம் ஒரு வானம், Coffee with காதல், DSP, விடுதலை 1, ருத்ரன், தீராக்காதல். 7 வருடங்களாக பணியில் இரவு, பகல் சலிக்காமல் ஆர்வம் செலுத்தி வந்த இவர், தற்போது தனது துறையில் அடுத்த கட்ட கவனம் செலுத்தி வருகிறார்.



## கலாச்சாரம்

திரு. **T.K. செல்வராஜ்** அவர்கள்
அருமைக்காரர்,
திருவேங்கடம்பாளையம், பெருந்துறை

நமது கலாச்சார பண்பாடு வழக்கங்களை மிகவும் முக்கியத்துவம் கொடுப்பதோடு, நமது இளைய சமுதாயத்திற்கு அதைக் கொண்டு சேர்க்கும் பணியிலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டிருப்பவர்.கொங்கு சமுதாய சீர்வகைகளை முன்னோர்களிடமிருந்து முறைப்படி கற்றுக்கொண்டு அதன்படி அடுத்த தலைமுறைக்கும் சரியான முறையில் கொண்டு செல்ல பாடுபட்டு வருகிறார். நமது கொங்கு சமுதாய சீர் மற்றும் அருமை பெருமைகளை மிகவும் மதிக்கக்கூடிய இவர், இதை ஒவ்வொருவரும் தனது அடுத்த தலைமுறைக்கு கற்றுக் கொடுக்க வேண்டும் என்று ஈடுபாடு கொண்டவர்.

60 வருடங்களுக்கும் மேலாக பரம்பரையாக இவரின் குடும்பம் சீர் சடங்குகளை செய்து வருவது பெருமைக்குரியது. திருமணம், எழுதிங்கள் சீர் போன்ற முக்கிய நிகழ்விற்கு சீர்க்காரர் என்கிற முறையில் முக்கிய பங்கு வகிக்கின்றார். முறையான நல்ல நேரப்படி, முன்னோர்களின் வழிகாட்டுதலில் கற்றுக்கொண்ட சீர்களை முறையாக செய்வதின் மூலம் அதன் பலனை அக்குடும்பத்தினர் சிறப்பாக அனுபவிக்க அனைத்து சீர்களையும் குறித்த நல்ல நேரத்திற்குள் முடிப்பது இவரின் சிறப்பம்சம். மேலும் முன்னோர்களிடமிருந்து கற்ற இந்த சீர்வகை கலாச்சாரம் மற்றும் சம்பிரதாயங்களை அப்படியே கொஞ்சமும் மாறாமல் அடுத்த தலைமுறைக்கும் கற்றுக் கொடுத்துள்ளார். கிட்டத்தட்ட 90க்கும் மேற்பட்ட திருமணங்களுக்கு இவர் சீர் சம்பிரதாயங்கள் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. ஈரோடு மாவட்டம் பெருந்துறை திருவேங்கடம் பாளையத்தை சேர்ந்த இவருக்கு மகாலட்சுமி என்ற மனைவியும், கார்த்திக் என்ற மகனும், திவ்யா என்ற மருமகளும், சுகந்தி என்ற மகளும் பூபதிராஜா என்ற மருமகனும் பேரன் பேத்திகளும் உள்ளனர்.



## கலாச்சாரம்

திரு. **N. நவீன்** M.A., M.Tech., அவர்கள்
நவீன் பிரபஞ்சன் வள்ளிக்கும்மி, கோவை

**கும்மி ஆசிரியர் :** கும்மி என்பது தமிழ்நாட்டில் பிரபலமான ஒரு நாட்டுப்புற நடனம், அதாவது கைதட்டல் மற்றும் கருவிகள் கண்டுபிடிக்கப்படாத நேரத்தில்

**யோக பயிற்சியாளர் :** ஒட்டுமொத்த நல்வாழ்வுக்கு கூடுதலாக தியானம் மற்றும் நினைவாற்றலை ஊக்குவிக்கிறது

**உளவியலாளர்** : மனநோய்க்கு சிகிச்சை அளிக்க அவரது உளவியல் அறிவு மற்றும் ஆராய்ச்சியைப் பயன்படுத்துதல்

**தனிப்பட்ட வாழ்க்கை** : டோக்மாய் எக்ஸைல் டெக்னாலஜி பிளெச்சன் டெக்ஸ்டைல் டெக்னாலஜியை முடித்தார், டெக்ஸ்டைல் டெக்னாலஜியில் எம் டெக் பாரத்தியார் பல்கலைக்கழகத்தில் உள்ள M.A., Psychology தனது ஆர்வத்தால், யோகா துறையைத் தேர்ந்தெடுத்து பயிற்சி செய்து வருகிறார். 15 வருடங்கள் அதை விட அதிகமாக பாரதியார் பல்கலைக்கழகத்தில் மனித மேன்மைக்கான யோகா முடித்தவர் 500க்கும் மேற்பட்ட மேடை நிகழ்ச்சிகளை நிகழ்த்தினார். அவர் பல நாடுகளில் பல மேடை நிகழ்ச்சிகளை ஆன்லைன் மற்றும் ஆஃப்லைன் முறைகளில் முடித்தார் அவர் பணியமர்த்தப்பட்டவர் ஒரு தனியார் நிறுவனத்தில் யோகா பயிற்சியாளராக பணியாற்றினார்.

1500க்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு உளவியல் ஆலோசனை, மன அழுத்த நிவாரணத் திட்டங்கள் மூலம் அவர் நிறுவனத்தின் சமூகவியல் துறையில் முக்கியப் பங்கு வகிக்கிறார். அவர் தனது குழந்தை பருவத்திலிருந்தே “கும்மி–ஒரு பாரம்பரிய நடனத்தை 3 ஆண்டுகளாக பயிற்சி செய்து வருகிறார். அந்த துறையில் ஏற்றுமதி மற்றும் அவரது ஆராய்ச்சி. இது ஆயிரக்கணக்கானோருக்கு திறமையை எடுத்துச் செல்ல அவரைத் தூண்டியது

### சாதனைகள் & விருதுகள்:

20 வயதில், அவர் “ஒயில் கும்மி” பகுதியில் பயிற்றுவிப்பாளராக/ஆசிரியராக ஆனார், அவர் தனது ஆராய்ச்சியின் மூலம் நுண்ணறிவுகளைப் பெற்ற பிறகு, இந்த பாரம்பரிய

நடனம் உடல் மற்றும் மன நலன்கள் இரண்டையும் கொண்டுள்ளது என்பதை அடையாளம் காண முடிந்தது. பல வருட பயிற்சி அவரை துறையில் மூத்தவராக ஆக்கியது. போரூர் ஆதூனிடம் இருந்து தமிழ்மணம் விருது. யோகா குறித்து இரண்டு புத்தகங்களை எழுதியுள்ளார்.

200க்கும் மேற்பட்ட அரங்குகளில் நிகழ்ச்சிகள் மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

1500 க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு இந்த பாரம்பரிய & பயிற்சி மூலம் ஒயில் கும்மியைப் பாதுகாத்தல்

### பண்டைய கலை. புத்தகத்தைப் பற்றி

சான்றளிக்கப்பட்ட யோகா நிபுணத்துவ வழிகாட்டி புத்தகம் – தொகுதி 1 மற்றும் தொகுதி 2. யோகா சான்றிதழ் வாரியத்தின் தன்னார்வ யோகா சான்றிதழ் தேர்வுகளில் கலந்துகொள்ளும் மக்களுக்கு உதவும் வழிகாட்டியாக இந்தப் புத்தகம் எழுதப்பட்டுள்ளது. புத்தகம் இரண்டு தொகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. இது YPI, YWI & YTE தேர்வுகளுக்கான கோட்பாடு தலைப்புகளை உள்ளடக்கியது.



## சமூக சேவை

**திரு. Sanyo குமார் (எ) P. சிவக்குமார் அவர்கள்**
**தலைவர், கண்ணொளித் திட்டம்,**
**திருச்செங்கோடு**

1971 ஆம் ஆண்டு செப்டம்பர் 2 ஆம் நாள் திருச்செங்கோடு வட்டம் உஞ்சனை மேட்டுப்பாளையம் திரு. பழனிவேல் பழனியம்மாள் தம்பதியருக்கு மகனாக பிறந்தார். இவருக்கு ஒரு சகோதரன் உண்டு பள்ளிப்படிப்பை திருச்செங்கோடு வட்டம் உலகப்பம்பாளையம் அரசு மேல்நிலை பள்ளியில் முடித்தார். தனது தகப்பனாரின் தொழிலான போர்வெல் தொழிலை ஏற்று நடத்தினார். இவருக்கு லலிதா என்ற மனைவியும், தர்ஷனா, ஸ்ரீ ரக் ஷா என்ற இரு புதல்விகள் உள்ளனர்.

தர்ஷனா கல்வியில் சிறப்பான இடத்தை பெற்று புதுடெல்லியில் உள்ள ஸ்ரீராம் கலை கல்லூரியில் பட்டப்படிப்பை முடித்து C.A படிப்பை சென்னையில் உள்ள இசை அசோசியேட்டில் பயிற்சி பெற்று இறுதியாண்டு தேர்வுக்கு தயாராகி வருகிறார். ஸ்ரீ ரக் ஷா அவர்களும் சகோதரியைப் போலவே கல்வியில் சிறந்து தற்சமயம் சென்னை அம்பேத்கர் சட்டப் பல்கலைகழகத்தில், School Of Excellence Law வில் இரண்டாம் ஆண்டு சட்ட படிப்பு பயின்று வருகிறார். திரு. குமார் அவர்கள் தன்னுடைய நிறுவனமான சேன்யோ பெயரால் மக்களால் அன்புடன் சேன்யோ குமார் என்று அழைக்கப்படுகிறார்.

சேன்யோ குமார் அவர்கள் 1996 ஆம் ஆண்டு திருச்செங்கோடு வட்ட கொங்கு வேளாளர் சங்கத்தில் இணை செயலாளராக சிறப்பாக செயலாற்றினார். திருச்செங்கோடு அரிமா சங்கத்தில் 2009–2010 பொருளாளராக சிறப்பாக சேவையாற்றினார்.

2017 ஆம் ஆண்டு “நம்ம திருச்செங்கோடு அறக்கட்டளை” என்ற பெயரில் ஒரு சேவை அமைப்பை உருவாக்கி, திருச்செங்கோடு நகரை மாசில்லா நகரமாக மாற்றி பசுமை நகரமாக உருவாக்கும் விதமாக சுமார் 10000 க்கும் மேற்ப்பட்ட மரக்கன்றுகளை நட்டு பராமரித்து வருகிறார்கள். கொரோனா காலத்தில் ஆதரவற்ற மக்களுக்கு உணவு, துணிகள் வழங்கி உதவினார்கள்.

மேலும் அரசு மருத்துவமனை நோயாளிகளுக்கு தேவையன உதவிகளையும் மருத்துவமனைக்கு தேவையான உபகரணங்களை வழங்கி வருகிறார்களே. ஏழை மாணவ, மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகை அறக்கட்டளை மூலம் வழங்கி தற்போது நிறுவன தலைவராக செயல்பட்டு வருகிறார்.

திரு. சேன்யோ குமார் அவர்கள் திருச்செங்கோடு அரிமா சங்கத்தில் 2017 ஆம் ஆண்டு முதல் கண்ணொளி திட்டத்தில் தலைவராக பொறுப்பேற்று மிகச்சிறப்பாக சேவையாற்றி வருகிறார். இதுவரை நூற்றுக்கனக்கான கண் தானங்களை பெற்று ஏராளமானோர் வாழ்வில் ஒளி ஏற்றி உள்ளார். இவரது கண் தான விழிப்புனர்வு சேவையானது பண்ணாட்டு அரிமா சங்கத்தால் அங்கிகரிக்கப்பட்டு பல சிறப்பு விருதுகளை வழங்கி உள்ளது.



## சமூக சேவை

திருமதி **M. கற்பகம் இராமசாமி** M.A., B.Ed., அவர்கள்
தலைமையாசிரியர், ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி,
கவிதா லட்சுமி நகர், திருப்பூர் வடக்கு

திருப்பூர் மாவட்டம் காங்கேயம் வட்டம், தாராபுரம் தாலுகாவில் வெள்ளகோவில் எனும் சிற்றூரில் ஒரு நடுத்தர விவசாய குடும்பத்தில் திரு இராமசாமி திருமதி கண்ணாத்தாள் ஆகியோரின் நான்கு புதல்வர்களில் மூத்த மகளாய் பிறந்தவர். சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு பெண் கல்வி அதிகம் போற்றப்படாத சமுதாயத்தில் இருந்து தன் பெற்றோரின் மாற்றுச் சிந்தனையால் அரசு பள்ளியில் தன் ஆரம்பக் கல்வியை பயின்று குடும்பப் பொறுப்புகளையும் ஏற்று இளம் வயதில் ஆசிரியர் பட்டய படிப்பை முடித்தவர் பள்ளி பருவத்திலேயே கலை, அறிவியல், விளையாட்டு என பன்முகத் திறமைகளை கொண்டு பரிசுகள் பல பெற்று சிறந்த மாணவியாக திகழ்ந்தவர்.1997 ஆம் ஆண்டு வெள்ளகோவில் ஒன்றியம் வீரசோழபுரம் நடுநிலைப் பள்ளியில் தன் ஆசிரியர் பணியை தொடங்கினார்.

2001 ஆம் ஆண்டு மாவட்டத்தின் “சிறந்த மக்கள் தொகை கணக்கெடுப்பாளர்” என தேர்ந்தெடுக்கப்பட்டு மத்திய அரசின் வெள்ளிப் பதக்க விருது பெற்றார். 2008 ஆம் ஆண்டு தலைமை ஆசிரியராக பதவியேற்ற கவிதா லட்சுமி நகர் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, ஊரின் ஒதுக்குப்புறத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் வசிக்கும் பகுதியின் குப்பை கிடங்கில் 8–6 என்ற அளவில் ஒரே அறையில் செயல்பட்டு வந்தது.

பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு ஒன்பது சென்ட் இடத்தை பள்ளிக்கென பெற்று SSA நிதி ரூ 8,50,000 மற்றும் தன் சொந்த பங்களிப்புடன் பொதுமக்களிடம் வசூலித்த நிதி ரூ 5,00,000 கொண்டு கிரானைட் கல் பதித்த தரைத்தளம், சுத்திகரித்த குடிநீர் வசதி, வகுப்பிற்கு இரண்டு மின்விசிறிகள், டெஸ்க் பெஞ்ச் என மெட்ரிக் பள்ளி தரத்தில் பிரம்மாண்டமாக உருவாக்கியுள்ளார். காட்சிகளில் கல்வி எனும் சூத்திரத்தில் பள்ளி சுவர்களில் அடிப்படை கல்விக் கோட்பாடுகளை வண்ணமிகு ஓவியங்களாக படைத்து பள்ளி மாணவர் சேர்க்கை விகிதத்தை அதிகரித்து பல பத்திரிகைகள் தொலைக்காட்சி ஊடகங்களின் விருதுகளைப் பெற்றார்.50 பெண் குழந்தைகளுக்கான “செல்வமகள் சேமிப்பு திட்டத்தினை” ரோட்டரி சங்கத்துடன் இணைந்து துவக்க கட்டணத்தை இலவசமாக அளித்து துவங்கி இன்று வரை 200 பெண்

குழந்தைகளுக்கான திட்டமாக விரிவுபடுத்தியுள்ளார். ஒவ்வொரு கல்வி ஆண்டிலும் தாய், தந்தையை இழந்த மாணவர்களுக்கு பள்ளி சீருடை, புத்தகப்பை போன்றவற்றை தன் சொந்த பங்களிப்பில் அளித்து வருகிறார். இரண்டு வகுப்பறைகளை நவீன தரத்தில் Smart Board Class Room ஆக அமைத்து கல்வித் தரத்தை மேம்படுத்தியுள்ளார்.

பாரம்பரிய உணவுத் திருவிழா, அறிவியல் கண்காட்சி, கல்வி சீர் விழா, எண்ணும் எழுத்தும் திருவிழா என மாணவர்களின் கலாச்சார கற்றலையும் ஊக்கப்படுத்தி வருகிறார். ரோட்டரி சங்கத்துடன் இணைந்து கண் மருத்துவ முகாம், கல்வி உதவித்தொகை வழங்குதல் போன்றவற்றை சிறப்பாக நடத்தி வருகிறார். கொரோனா காலகட்டத்தில் பள்ளி குழந்தைகளுக்கு தினமும் பால், பிஸ்கட், பழங்கள் வழங்கியதோடு குடும்பத்திற்கு 10 கிலோ அரிசி வழங்கப்பட்டது.

ஒவ்வொரு ஆண்டும் மாணவர்களின் தனித்திறமைகளை கண்டறிந்து மேடையேற்றி, பரிசளித்து ஊக்குவித்து மாவட்ட அளவில் பங்கேற்கச் செய்துள்ளார். வில்லுப்பாட்டு, நாடகம், பொம்மலாட்டம் ,ஆடல் பாடல் என புதுமை முறைகளை கையாண்டு கல்விப் பணியில் அசத்தி வருகிறார். 2008 முதல் இன்று வரை ஒவ்வொரு வருடமும் சுதந்திர தின விழா மற்றும் குடியரசு தின விழா ஆகிய தேசிய விழாக்களை மாணவர்களுக்கு தேசிய உணர்வளிக்கும் விதத்தில் தேசத் தலைவர்களின் மாறுவேட போட்டி, பேரணி, நாடகங்கள் என மிக பிரம்மாண்டமாக நடத்தி பரிசுகள், விளையாட்டு பொருட்கள், இனிப்புகள் மற்றும் உணவு வழங்கி நாட்டுப்பற்றை மாணவர்களுக்கு ஊட்டி வருகிறார்.

இவரின் முன்னெடுப்புகள் குழந்தை தொழிலாளர் ஒழிப்பு விழிப்புணர்வு, சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு, மாணவர் சேர்க்கை விழிப்புணர்வு, ஆகியவற்றை உளப்பூர்வமாக உணர்த்தியமை. இவரின் புதுமை முயற்சிகளை கண்டு தமிழக அரசு 2018 ஆம் ஆண்டு “சர்வபள்ளி டாக்டர் ராதாகிருஷ்ணன் நல்லாசிரியர் விருது” வழங்கி கௌரவித்துள்ளது.




## இயற்கை பாதுகாப்பு

திரு. R. நந்தகுமார் B.E., அவர்கள்
Founder and Managing Director,
Biodiversity Conservation Trust (BCT),
Sathyamangalam Tiger Reserve Forest Habitat Restoration

சத்தியமங்கலம் பகுதியில் விவசாய குடும்பத்தில் பிறந்த இவர் பி.இ. பட்டம் படித்து விட்டு இயற்கையின் மீது இருந்த ஆர்வத்தால் நாம் பிறந்து வாழ்ந்து வரும் பகுதியில் உள் வனப்பகுதியின் வளம் குறைந்து வருவதால் அதனை மீண்டும் உருவாக்க (Habitat restoration) அவரது பயணம் வனங்களில் தொடங்கியது. மனிதர்களுக்கும் இயற்கைக்கும் உண்டான தொடர்பை வேகமாக இழந்து வருகிறோம். இதனால் வனங்கள் வன உயிரினங்கள் காடுகளின் பரப்பளவு வேகமாக குறைந்து வருகிறது. மேற்கு தொடர்சசி மலைகளில் உள்ள சத்திய மங்கலம் புலிகள் காப்பகம் முதுமலை புலிகள் காப்பகம் பகுதியில் தமிழ்நாடு வனத்துறையுடன் இணைந்து மீண்டும் காடுகளை உருவாக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமிழ்நாடு வனத்துறையுடன் BCT குழு இணைந்து காடுகளில் இயற்கையாக அமைந்த குட்டைகளை தூர்வாரி அதில் லாரிகளை கொண்டு காடுகளுக்குள் சென்று அடுத்த பருவமழை தொடங்கும் வரை காடுகளில் தண்ணீர் ஊற்றி வன உயிரினங்களின் தாகத்தை போக்கி வருகின்றனர்.

பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு வனம் மற்றும் சுற்றுச்சூழல் வன உயிரினங்கள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தி அவர்களை வைத்து காடுகளில் மனிதர்களால் போடப்பட்ட கண்ணாடி பாட்டில்கள், பிளாஸ்டிக் பொருட்களை அப்புறப்படுத்தி, யானைகள் மற்றும் வனவிலங்களுக்கு தூய்மையான வழித்தடங்களை ஏற்படுத்தி வருகின்றனர். மாதம் இரண்டு முறை மாணவர்களை கொண்டு 2 டன் வரை பிளாஸ்டிக் மற்றும் கண்ணாடி பாட்டில்களை அப்புறப்படுத்தி காடுகளை தூய்மைப்படுத்தி வருகின்றனர். மேற்கு தொடர்ச்சி மலையின் பெரும் பொக்கிஷமான ஆறுகளை மனிதர்கள் கழிவுகள் மற்றும் மருத்துவ கழிவுகளை கொட்டி நேரடியாக மாசுபடுத்துகிறார்கள். இதனை தடுக்க பவானி ஆற்றை சுத்தம் செய்யும் பணியையும் தற்போது செய்து வருகின்றனர். தூய்மையான காற்று, சுத்தமான தண்ணீர், நாம் உண்ணும் உணவு உற்பத்தி செய்ய விவசாயம் இவை அனைத்தும் வளமான காடுகள் இருந்தால் மட்டுமே நாம் நமது அடுத்த தலைமுறைக்கு ஆரோக்கியமான இயற்கை வளங்களை கொடுத்து செல்லவும், நோய் இல்லாத வாழ்க்கை முறையை செயல்படுத்த இயலும். வனம் நேசிப்போம். வனம் காப்போம்.



## இயற்கை பாதுகாப்பு

செல்வி. **சௌமியா பாலசுப்பிரமணியம்**
B.Tech., M.A., (Social work) அவர்கள்
ஹுகா நாட்டுவிதை சேகரிப்பாளர்கள் கூட்டமைப்பு,
காஞ்சிகோயில், ஈரோடு.

பாரம்பரிய விதைகளை சேகரிப்பதற்காக எடுத்த மாபெரும் முயற்சி, ஹுகா அறிமுகப்படுத்திய விதை யாத்திரை பயணத்தின் மூலம் இந்தியாவின் மூலை முடுக்குகளில் உள்ள கிராமங்களுக்குச் சென்று அழிந்து வரும் பாரம்பரிய விதைகளைச் சேகரித்து, அவ்விதைகளை விவசாயிகளிடம் கொடுத்து விதைப்பெருக்கம் செய்கின்றனர். இன்று 200க்கும் மேற்பட்ட பராம்பரிய நாட்டு காய்கறி விதைகளை ஹுகா நாட்டு காய்கறி விதைகளை ஹுகா விதை வங்கியில் சேகரித்து, விவசாயிகளுடன் அல்லாது பொதுமக்களம் பயன் பெறும் வகையில் ஹுகா இயங்கி வருகின்றது.

நாம் இதுவரை பார்த்திடாத அரிய வகை டோகோ தக்காளி, 16க்கும் மேற்பட்ட வெண்டை வகைகள், ஆளுயர 1000ம் காய்ச்சி வாழை, சிவப்பு மக்காச்சோளம், 2 1/2 அடி நீளமான பேய்ப்பீர்க்கன் மற்றும் பல. ஹுகா நிறுவனம் இந்தியாவில் முதன்முறையாக லண்டன் பல்கலைக் கழகத்துடன் இணைந்து, காஞ்சிக்கோவில் ஆசிரியர் பள்ளியுடனும், ஜம்மு காஷ்மீர் ஏஞ்சல் பள்ளியுடனும் இணைந்து ஹுகா விதை வங்கி ஒன்றை ஆரம்பித்து, குழந்தைகளுக்கு பாரம்பரிய நாட்டு விதைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத் வருகின்றனர்.

ஹுகா நிறுவனம் மத்திய அரசிடமும், தமிழக அரசிடமும் பல விருதுகளைப் பெற்றுள்ளது. தற்சமயம் தமிழ்நாடு அரசு வேளாண்மைப் பல்கலைக்கழகத்துடனும் விவசாயிகளுக்கு பாரம்பரிய விதை உற்பத்தி பயிற்சியினை விவசாயிகளுக்கு வழங்குகின்றனர். ஹுகா நிறுவன உரிமையாளர் செல்வி. சௌம்யா பாலசுப்பிரமணியம், சாதாரண விவசாய குடும்பத்தில் பிறந்து, தொழில் நுட்பம் பயின்று மீண்டும் மும்பை டாடா பல்கலைக்கழகத்தில் சமூக சேவை படிப்பில் தங்கப் பதக்கம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.



## மக்கள் சேவை

திருமதி. **T. சிவகாமி தங்கவேல்** அவர்கள்
ஈரோடு மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் (வார்டு எண்.11)
ஈரோடு மாவட்ட திட்டக்குழு உறுப்பினர்

16 ஊராட்சிகளுக்கு மாவட்ட கவுன்சிலர் நிதியிலிருந்து 1,65,19,000 ரூபாயை ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் பிரித்துக் கொடுத்து மக்கள் பிரச்சனைக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

மாவட்டக் கவுன்சிலராக தனது சொந்த செலவில் 9 பணிகளின் மதிப்பு ரூ. 2,90,650. பெற்றோர் இழந்த குழந்தைகள பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் 10 பயனாளிகள் பயனடைநதுள்ளனர். 30 ஆண்டுகாலமாக பட்டா இல்லாத நாதிபாளையம், அய்யம்புதூர், கடுக்காம்பாளையம், கே. மேட்டுப்பாளையம், செல்லக்குமாரபாளையம், கங்கம்பாளையம் ஆகிய ஊராடச்சிகளில் சுமார் 250க்கும் மேற்பட்டவர்களுக்கு பட்டா வழுங்கப்பட்டுள்ளது.

நமக்கு நாமே திட்டத்தின் மூலம் 4 திட்டப்பணிகள் ரூ. 11,15,000 மதிப்பில் செய்யப்பட்டுள்ளது. 150க்கும் மேற்பட்ட மரச்செடிகள் வளர்க்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

நாமக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் முயற்சியில் 500க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு ரூ. 53,58,555 பயிர்க்காப்பீட்டுத் தொகையாக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

16 ஊராட்சிகளில் முதியோர் உதவித்தொகை, கணவனால் கைவிடப்பட்டோர் உதவித் தொகை சுமார் 100 நபர்களுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. இதுமட்டுமல்லாமல் சுமார் 50 மாற்றுத்திறனாளிகள் பயன்பெற சைக்கிள், பேட்டரி வாகனங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.



## மக்கள் சேவை

திரு. **M.K. சாந்தலிங்கம்** அவர்கள்
நகரமன்ற உறுப்பினர், பொள்ளாச்சி

கோவை மாவட்டம் ஆனைமலை தாலுகா பூச்சனாரி கிராமத்தில் உள்ள பஞ்சாயத்து ஆரம்பப் பள்ளியிலும், உயர்நிலைப்பள்ளி ராமநாதபுரம் கிராமத்தில் உயர்நிலைப் பள்ளியிலும் அடுத்து பன்னிரண்டாம் வகுப்பு வரை பொள்ளாச்சி நகராட்சி பகுதியில் உள்ள நகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியிலுமாக பன்னிரெண்டாம் வகுப்போடு நிறைவு பெற்றது. மேற்படிப்பிற்கான வாய்ப்பு குடும்ப சூழலால் அமையப் பெறவில்லை. பொள்ளாச்சி ஏ பி டி நிர்வாகத்தில் ஊழியனாக பயணத்தை தொடங்கினாலும், 2007 ஆம் ஆண்டு கொங்கு வேளாளர் கவுண்டர் பேரவையில் என்னை இணைத்துக் கொண்டு கொங்கு மக்களின் சமூகம் சார்ந்து பயணத்தை தொடங்கினார்.

பேரவையில் சமூகப் பணியாற்றிய காலகட்டத்தில் நமது சமூக அமைப்பு சார்ந்த மாநாடுகள், இயக்க செயல்பாடுகள் மற்றும் பல்வேறு போராட்டங்கள் மூலம் இன்னும் உழைப்பதற்கு வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தது. நம் கொங்கு அமைப்பு சார்ந்து முன்னெடுக்கப்பட்ட பாராளுமன்றத் தேர்தல் செயல்பாடுகள், சட்டமன்றத் தேர்தல் செயல்பாடுகள். உள்ளாட்சி தேர்தல் செயல்பாடுகளில் முழுமையாக ஈடுபடுத்தி களமாடிய பல்வேறு நிகழ்வுகள் அமைந்தது. இது ஒரு புறம் இருக்க நம் சமூகம் சார்ந்த பல்வேறு வரலாற்று நிகழ்வுகளையும் தீரன் சின்னமலை உள்ளிட்ட வரலாற்று தலைவர்களின் கோட்பாடுகளையும் வாசிக்க நேர்ந்த காலகட்டங்களால் இன்னும் அதிகமாய் இந்த வரலாற்றின் நீட்சியை மக்கள் பணியோடு செய்ய வேண்டும் என்ற எண்ணம் துளிர்ந்தது.

இந்த பரிணாமத்தில் கொங்கு நாடு தேசிய மக்கள் கட்சியின் தலைமை நிலைய செயலாளராக பொறுப்பும் வழங்கப்பட்டது தமிழக உள்ளாட்சி தேர்தல் களத்தில் கோவை மாவட்டம் பொள்ளாச்சி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பொள்ளாச்சி நகராட்சியில் நம் சமூகம் சார்ந்த கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் நகர மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். கொங்கு மக்கள் வசிக்காத கொங்கு மக்கள் சாராத நகரின் மையப் பகுதியான 26 ஆவது நகராட்சி வார்டில் பல்வேறு சமூக மக்களோடு ஒன்றிணைத்து அவர்களுக்கான எதிர்கால தேவையை நிறைவு செய்ய அதீத திட்டங்களோடு கலந்துரையாடி அந்தப் பகுதியில் ஒரு புது வேட்பாளராக நான் வெற்றியும் பெற்றார். எல்லாம் செயல்கூடும் என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில் கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் ஒரு நகர மன்ற உறுப்பினராகவும் நம் சமூகம் சார்ந்த இளைஞனாக பணியைத் தொடர்ந்து

கொண்டிருக்கிறார். மாண்புமிகு நமது பொதுச்செயலாளர் கொங்குநாட்டின் தலைவர் அண்ணன் ஈஸ்வரன் அவர்களின் குறிக்கோள்படி அனைத்து சமுதாய மக்களுக்கான பிரதிநிதியாகவும் நம்மை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் ஒரு உள்ளாட்சி பிரதிநிதியாக பல்வேறு வருடங்களாக தீர்க்க முடியாத பல்வேறு பிரச்சனைகளை முன்னெடுத்து அதை நகர மன்றத்தில் நம் கட்சியின் குரலாகவும் அந்தப் பகுதி மக்களின் குரலாகவும் ஓங்கி ஒலித்து பல்வேறு திட்டங்களை செயல் படுத்தி வருகிறார்.

நமது கொங்கு நாட்டினுடைய காவல் தெய்வமாக விளங்கக்கூடிய பொள்ளாச்சி அருள்மிகு மாரியம்மன் கோவில் நிர்வாகப் கோவிலின் தூய்மை பணியிலும் கோவிலின் பல்வேறு ஆக்கிரமிப்புகள் மற்றும் கழிப்பறை அகற்றம் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளை நகர மன்றம் மூலமாகவும் நம் சமூக மக்களின் மூலமாகவும் செய்துள்ளதோடு, உள்ளாட்சி பிரதிநிதியாக தேர்ந்தெடுத்த பிறகு குடமுழுக்கும் நடத்தப்பட்டு அதில் ஒரு நகர மன்ற உறுப்பினராக ஆக்கப்பூர்வமான பல்வேறு பணிகளை ஆற்றி இருக்கிறார். மக்களின் அத்தியாவசிய தேவையான சாக்கடை, சாலை மற்றும் விளிம்பு நிலையில் இருக்கக்கூடிய மக்களின் அன்றாட தேவைகள் உள்ளிட்ட அனைத்து தேவைகளும் பூர்த்தி செய்யப்பட்டு இனிவரும் எதிர்காலங்களிலும் ஆக்கப்பூர்வமாக நகர மன்றத்தின் மூலம் கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் குரலாக செயல்படுத்த முடியும்.

பதவியேற்பு விழாவில் நூற்றாண்டு கண்ட பொள்ளாச்சி நகராட்சியில் முதன் முறையாக நம் இன தலைவர் தீரன் சின்னமலை பெயரை சொல்லி அவர் பெயரால் பதவியேற்று கொண்டார். நகர மன்றத்தின் கூட்டங்களிலும் தீரன் சின்னமலை என்ற பெயரை ஓங்கி ஒலித்த ஒற்றை இளைஞனாக இருந்திருக்கிறார். கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் கொங்குநாட்டு தலைவர் அண்ணன் ER.ஈஸ்வரன் அவர்களுக்கும், வழிநடத்தி ஒரு குக்கிராமத்தில் பிறந்த ஒரு சாமானிய இளைஞனை சீர்படுத்தி செயல்படுத்தி மிகுந்த அடையாளத்தையும் ஆதாரத்தையும் உருவாக்கித் தந்த பொள்ளாச்சி மக்களால் ஆட்டுக்கிடா மில் நித்தியானந்தன் என்று அன்போடு அழைக்கப்படுகிற பொள்ளாச்சி மாவட்ட செயலாளர் மரியாதைக்குரிய அண்ணன் நித்யானந்தன் அவர்களால் தான் இத்தனையும் சாத்தியமாக்கியது என்று பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறார். பெற்றெடுத்த தெய்வங்கள் காளியப்ப கவுண்டர் மணிமேகலையாக இருந்தாலும் ஆசிர்வதித்து வளர்த்த ஆத்தா சீதையம்மாளின் பேரன்போடு இந்த விருதை மாண்போடும் உங்கள் அன்போடும் பெற்றுக் கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறார்.